
# 12.ஜிபூடி

*இ.ஜே.சுந்தர்*






நெருப்புப் பெட்டி போன்ற சிறிய கிழக்கு ஆப்பிரிக்க நாட்டின் பெயர் தான் ஜிபூடி. ஆப்பிரிக்க கண்டத்தின் வடகிழக்கே அமைந்துள்ள கொம்பு போன்ற பகுதியில் அமைந்துள்ள ஆப்பிரிக்க கண்டத்தின் மூன்றாவது குட்டி நாடு இது. அதாவது நம் தமிழ்நாட்டைவிட ஐந்தரை மடங்கு சிறியதான இந்நாட்டின் பரப்பளவு 23,200 ச.கி.மீ. தான். வாழும் மக்களோ 8,28,324 பேர்கள்.. அதுவும் 76% மக்கள் தலைநகர் ஜிபூடியில் தான் வாழ்கின்றனர். ஆம் தலைநகர் பெயரும் ஜிபூடிதான். உண்மையில் தலைநகரின் பெயரே நாட்டிற்கும் பெயராகியுள்ளது.



**ஜிபூடி கொடி**

இந்நாட்டின் முழுப்பெயர் ஜிபூடி குடியரசு (Republic of Djibouti) என்பதாகும். இதன் தென்கிழக்கே சோமாலியா,


வடக்கே எரித்திரியா, மேற்கிலும் தெற்கிலும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளும், பிற இடங்களில் ஏடன் வளைகுடாவும், செங்கடலும் சூழ அமைந்துள்ளது. செங்கடலையும், ஏடன் வளைகுடாவையும் ஒரு சிறிய தாவு தாவினால் அரேபிய தீபகற்பத்தை அடைந்துவிடலாம். ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் இணைக்கும் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் ஜிபூடி அமைந்திருப்பதே இதன் தனிச்சிறப்பும் வலிமையுமாகும். இதனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஜிபூடி ஆப்பிரிக்க கண்டத்தின் புகழ்பெற்ற வணிகத் தளமாக விளங்குகிறது.. இன்று உலகின் பரபரப்பான கப்பல் போக்குவரத்து நடைபெறும் மையங்களில் ஒன்றாகவும் உள்ளது.

சோமாலி சுல்தான்களின் உடன்படிக்கைகளின்படி இந்நாடு பிரஞ்சுக்காரர் கைகளுக்கு மாறியதால், 1896 முதல் 1967 வரை இந்நாட்டிற்கு பிரஞ்சு சோமாலிலாந்து என்றே பெயர் வழங்கியது.





இங்கு பெரும்பான்மையாக வாழ்வோர் சோமாலி(60%), அபார்( 35%) என்ற இரு இன மக்களே. சோமாலி இனக்குழுவில் உள்ள பெரும்பாலான உட்பிரிவு இசா இனத்தினராவர் பிரான்சிடமிருந்து விடுதலை பெற விரும்பினர் இசா குழுவினர். ஆனால் விடுதலை கிடைத்தால் இசாவினரின் கை ஓங்கிவிடுமென அபார்கள் அஞ்சினர். பக்கத்து எத்தியோப்பியவும் பல காரணங்களினால் பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியை இந்நாட்டின் தொடர விரும்பியது. இதற்காக 3 முறை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, பல கருத்து மோதல்களுக்குப்பின் 27 ஜூன் 1977 இல் இந்நாடு பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.


முந்தைய அதிபர் கெளலட்

ஹாசன் கெளலட் ஆட்டிடான் நாட்டின் முதல் குடியரசுத்தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். இவர் இசா இனத்தவாராயினும் அபார் இனத்தவரை அமைச்சரவையில் இணைத்து நடுநிலை ஏற்படுத்தினார். எனினும் நாட்டில் தொடர்ந்து நடந்த தேர்தல்களில் பல தில்லுமுல்லுகள் நடந்தன. எதிர்கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன. கெளலட் ஆட்சியில் மனித உரிமை மீறல்கள், அரசியல் வாதிகள் தலைமறைவாதல், அரசியல் கொலைகள், பாலியல் வன்முறைகள், தொழிற்சங்கத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படல் முதலிய கொடுமைகள் நிகழ்ந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. எனினும் 1999 இல் மருத்துவக்காரணங்களுக்காக ஓய்வுபெறும் வரை அவர் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டார்.


இன்றைய அதிபர் குயெல்லா

இவரை அடுத்து இவரின் மருமகனும் ஆலோசகருமான இஸ்மெயில் ஓமர் குயெல்லா 1999 முதல் இன்று வரை அதிபராக ஆட்சி நடத்திவருகிறார்.. மனித உரிமை மீறல்களிலும், எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதிலும் முந்தைய அதிபருக்கு இவர் சற்றும் சளைத்தவரல்லர் என்று விமர்சிக்கப்படுகிறார். எனினும் பக்கத்து நாடுகளுடன் நல்லுறவு கொள்வதைத் திறமையாகக் கையாண்டு பல எதிர்ப்புகளிடையே ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்து வருகிறார்..அதிபர் குயெல்லா மே 2003 இல் இந்தியா வந்திருந்தபோது ஜிபூடியில் ஒரு செமிண்ட் தொழிற்சாலை தொடங்க இந்தியாவின் உதவியை நாடிப்பெற்றார்.

சோமாலியையும் அதனை ஒட்டி வந்த பகுதிகளிலும் நாடோடிகளாக வாழ்ந்து வந்த இன்றைய இந்நாட்டின் குடிமக்கள்தான் ஆப்பிரிக்க இனக்குழுக்களில் முதலில் இசுலாமைத் தழுவியவர்களாவர். மக்களில் 94% பேர்கள் இசுலாமியர்கள். எஞ்சிய 6% பேர்கள் கிறித்துவர்கள். பரவலாகப் பேசப்படும் மக்களின் மொழியான அபாரும், சோமாலியும் நாட்டின் தேசிய மொழிகள் அல்ல. பிரஞ்சு மொழியும், அரபிக் மொழியும் தேசிய மொழியாக உயர்த்தப்பட்டுள்ளன. இசுலாமே தேசிய சமயமாயினும், மதம் மாறவோ, பிற சமயத்தவரை மணக்கவோ சட்டத்தில் தடையில்லை. ஆனால் சமூகத்தடை உள்ளது. மதம் மாறியோர் இசுலாத்திற்குத் திரும்ப அழுத்தம் தரப்படுகிறது. உலகெங்கும் கிறிஸ்மஸ் பண்டிகை டிசம்பர் 25 ஆம் நாள் கொண்டாடப்பட்டாலும் இங்கு ஜனவரி 7 ஆம் தேதி தான்


கொண்டாடப்படுகிறது. பழைய ஆர்தடாக்ஸ் கிறிஸ்துவ சபைகளின் தாக்கம் இது.

நாட்டின் 90% பகுதி பாலைவனம். எனவே ஜிபூடி நகரத்தில் தான் வாழ்கிறது.



ஜிபூடி நகரம்

ஏறத்தாழ 8 இலட்சம் மக்களில் 6 இலட்சம் பேர் தலைநகரத்தில் தான் வாழ்கின்றனர். . தலைநகரில் அரேபிய தாக்கம் அதிகம். வறண்ட வானிலை, கடும் வெயில், குடிநீர்ப்பிரச்சினை பொய்க்கும் மழை இவற்றால் தம் உணவுத்தேவையில் 3% ஐ மட்டுமே இந்நாடால் பூர்த்தி செய்யமுடிகிறது. சில பழங்களும், காய்கறிகளும் மட்டும் பயிரிடப்படுகின்றன. பலவற்றிற்கும் மற்ற நாடுகளை நாடும் நிலையில்தான் ஜிபூடி உள்ளது.. 3500 ஆண்டுகளுக்கு முன்பே மாடுகளை வீட்டு விலங்குகளாக்கிய பெருமை படைத்த இந்நாட்டில் இன்றும் பாதிபேர் கால்நடைகளால் வருவாய் பெறுகின்றனர்.



ஒட்டகம் மேய்ப்போர்

ஆடுகள், ஒட்டகங்கள் மேய்த்தல் மீன்பிடித்தல் என்பதே பலரின் வாழ்க்கையாக உள்ளது. எனினும் 50% மக்கள் வேலை இல்லாத்

திண்டாட்டத்தில் தவிக்கின்றனர். இதே எண்ணிக்கையில் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

செங்கடலின் குறுகலான தெற்கு நுழைவாயிலாக அமைந்துள்ள இதன் புவியியல் முக்கியத்துவம் காரணமாக இதன் பொருளாதாரம் - மற்ற பல ஆப்பிரிக்க நாடுகளுடன் ஒப்பிடுகையில் - மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படவில்லை. தனிநபர் வருவாய் $ 2874 ஆக இருந்தாலும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி $ 2..7 பில்லியனாக உயர்ந்துள்ளது.. பிரஞ்சு இரணுவத்தளம் இங்கு நிறுவப்பட்டு இதன் பொருளாதார செயல்பாடுகளுக்குப் பேருதவி புரிகிறது. தீவிரவாத எதிர்ப்பில் முன்னணி வகிக்கும் இந்நாட்டில் அமெரிக்காவும் இராணுவ முகாம் அமைத்துள்ளது. சுதந்திரமான சந்தைப்பொருளாதாரக்கொள்கையுடைய இந்நாட்டின் நாணயமான ஜிபூடி பிராங்க், அமெரிக்க டாலரோடு இணைக்கப்பட்டு, பணவீக்கம் இன்றிப் பாதுகாக்கப்படுகிறது. சேவையால் பொருளீட்டும் இதன் இலவச துறைமுகம் பல வருவாய் வாய்ப்புகளுக்கு வழிகோலுகிறது. இப்பகுதிக்கு வரும் கப்பல்களில் எண்ணெய் மற்றும் பிறவற்றை நிரப்பும் நிலையமாக ஜிபூடி துறைமுகம் விளங்குகிறது. பக்கத்து நாடுகளான எரித்ரியாவிற்கும், எத்தியோப்பியாவிற்கும் எல்லைப்போர் மூண்டபோது தம் துறைமுகத்தைப்பயன்படுத்த எத்தியோப்பியாவிற்கு உதவியது. இப்போது நிலைமை மாறியபோதும், ஜிபூட்டி துறைமுகத்தைத் தன் நாட்டுத்துறைமுகம்போல எத்தியோப்பியா பயன்படுத்திவருகிறது.


ஜிபூடி துறைமுகம்

மேலும் இத்துறைமுகத்தின் 70% ஏற்றுமதி, இறக்குமதிகள் எத்தியோப்பியாவுடன்தான்.. தன் நலனையும் கருதி பிரான்சு ஜிபூட்டியின் துறைமுகம், இரயில் நிலையம், வானூர்தி நிலையம் முதலியவற்றை நவீனப்படுத்த பெருந்தொகை வழங்கியுள்ளது. ஆப்பிரிக்காவின் கொம்புப்பகுதியுடன் அரேபிய தீபகற்பத்தை ஜிபூடி வழியாக இணைக்க 28.5 கி.மீ நீளமுள்ள கடற்பாலம் கட்ட சௌதி அரேபியா திட்டமிட்டுள்ளது.

முதல் மனித இனம் தோன்றிய இடமாக ஆப்பிரிக்கா கண்டறியப்படுவதுற்குக் காரணமான இடங்களில் இங்குள்ள அபே ஏரியும் ஒன்று. 3.2 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய லூசி என்ற பொதுப்பெயரில் கிடைத்த தொடக்க நிலை மனித எலும்புகள் (Australopithecus Africanus) மானிட தோற்றம் பற்றிப் புது வெளிச்சம் பாய்ச்சின. பெண்ணே முதலில் தோன்றினாள் என்றும், எல்லா இன மனிதர்களின் தோற்றுவாயும் ஆப்பிரிக்கா என்றும் இங்கு கண்டறிந்த அகழ்வாய்வுகள் மெய்ப்பித்தன. இங்குள்ள அசால் என்ற ஏரி சாக்கடலைவிடவும் உப்பு நிறைந்தது.


அசால் உப்பு ஏரி

அண்டார்டிக்காவில் உள்ள உப்பு ஏரி எப்படி இருக்குமென அறிய இங்கு சென்றால் போதும். ஆப்பிரிக்காவின் கீழான இடமும் உலகின் 3வது கீழான இடமும் இதுதான்.

நம்மூரில் வெற்றிலை போடுவதுபோல குவாட் என்ற மருத்துவ இலையை மென்று தின்னும் வழக்கம் இங்கு உள்ளது. குவாட் போடுவது சற்று போதை தருவதாகும். இது ஐரோப்பாவின் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. 6 ஆண்டுகள் தொடக்கக் கல்வி இந்நாட்டில் கட்டயமாக்கப்பட்டுள்ளது.

இதனால் 70% க்கும் மேற்பட்டோர் படிப்பறிவுள்ளவர்களாய் உள்ளனர். 100 வரிகளுக்கு மேற்பட்ட காவியக்கதைகளை இந்நாட்டு இளைஞர்கள் சிலர் மனப்பாடம் செய்து ஒப்பிக்கின்றனர். இதனைப் பெருமைக்குரிய சாதனையாகக் கருதுகின்றனர். கால்பந்தே இளைஞர்களின் விருப்ப விளையாட்டாகும். உலக கோப்பை கால்பந்தாட்டத்தில் ஜிபூடி பங்கு கொண்டு வருகிறது.

பெட்ரோல், இயற்கை எரிவாயு, நிலக்கரி ஆகியன இந்நாட்டில் அறவே இல்லை. எனவே வெளிநாட்டிலிருந்து பெட்ரோலை இறக்குமதி செய்தே மின்சாரம் கூட எடுக்கப்படுகிறது. கோதுமை, ரொட்டி, சர்க்கரை, பெட்ரோலியப் பொருள்களின் விலையை அரசு கட்டுப்படுத்துகிறது. பிரஞ்சு குடிமக்கள் நாட்டின் வணிகத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். இராணுவத்தில் 9850 வீரர்கள் உள்ளனர். இவர்களைத் தவிர பிரஞ்சு நலன்களுக்கு எதிரானவற்றைச் சமாளிக்க 2850 பிரஞ்சு வீரர்கள் தலைநகர் ஜிபூடியில் முகாமிட்டுள்ளனர்.

நாடு பொருளாதார மேம்பாடு அடைய உப்பு உற்பத்தியில் மிகுந்த கவனம் செலுத்தி, ஆண்டுக்கு 40 இலட்சம் டன் உப்பை ஜிபூடி உற்பத்திசெய்கிறது. தொலைத்தொடர்பு திட்டங்களை விரிவுபடுத்தியும், , சிறு வணிகர்களை ஊக்குவித்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்ட அரசு முயல்கிறது. நாடெங்கும் ஞாயிறு முதல் வியாழன் வரை வேலைநாள்கள். வெள்ளி, சனி விடுமுறை. வேலைநேரம் 7.30- 12; 3.30-6. கதிரவன் மறைந்தபின் டாக்சி கட்டணங்கள் 50% கூடுதலாகும்.


நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் மிகுந்த கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. தொழிலாளர்கள் கூட்டாகப் போராடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. போராட்டத்தில் ஈடுபடுவோர் உடனடியாகக் கைது செய்யப்படுவர். தொழிலாளர்கள் நிலை பரிதாபத்திற்குரியது. தொழிலாளர் நலன்களுக்கு எதிராகச்செயல்படும் தொழிற்சாலைகளைக் கண்காணிக்க போதிய மேற்பார்வையாளர்கள் அரசிடம் இல்லை. மனித உரிமை மீறல்கள், காவல்துறை அராஜகம், மோசமான சிறைச்சாலை சூழல்கள், சட்ட விரோத சித்திரவதைகள் முதலியவற்றை எதிர்த்துப்போராட நாதியற்ற நிலை உள்ளது.

நாட்டின் பெரிய சவால் மக்களின ஆயுள் குறைவுதான். 61.61 வயது இங்கு சராசரி ஆயுளாகும். வயது வந்தோரில்(14-49) 7.1% பேர்களுக்கு எச்.ஐ.வி/ எய்ட்ஸ் உள்ளது. 15-24 வயதுடையோரில் 11% பேர்கள் எய்ட்ஸ் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். சத்துணவு குறைவால் வரும் நோய்களுடன் காசநோய், மலேரியா ஆகியனவும் மக்களைப் பெருமளவில் தாக்கி வருகின்றன. உலகில் மனித ஆயுள் குறைவான நாடுகளில் ஜிபூடி 168வது இடத்தில் உள்ளது. இந்நாட்டிற்கு விசா வாங்க வேண்டுமாயின் மலேரியா, மஞ்சட் காமாலை முதலியவற்றிற்குத் தடுப்பூசி போடுவது கட்டாயமாகும்.



ஜிபூடி நாகரிக பெண்கள்

பெண்களுக்கு இங்கு இழைக்கப்படும் விசித்திரமான கொடுமை அதிரச்சியளிக்கிறது.


பாரம்பரிய உடைகள் ஜிபூடி பெண்கள்

இசுலாமிய ஆண்கள் சுன்னத் செய்வது போல பெண்களும் சுன்னத் செய்வது. இப்பகுதியில் பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. பண்டைய எகிப்திய நாகரிகத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட பழக்கம் இது. பெண்குறியின் கிளிட்டாரிசின் ஒரு பகுதியை வெட்டி எறிந்து விடுகிறார்கள்.


பெண்கள் சுன்னத் செய்ய பயன்படும் கருவிகள்

சில பழங்குடி மக்கள் 7 வயதிற்குள் பெண்குழந்தையின் பிறப்புறுப்பின் சதைப்பகுதியை முழுமையாக அறுத்து, பெண் உறுப்பை தைத்துவிடுவார்கள். சிறுநீர் கழிக்கவும், மாதவிடாய் வெளியேறவும் சிறு ஓட்டை இடப்படும். திருமணம் ஆனபின்பே இத்தையல் பிரிக்கப்படும். இந்தப் பழக்கத்திற்கு எதிராக தீவிர பிரச்சாரம் நிகழ்ந்து 1994 இல் இதை எதிர்த்து அரசே சட்டம கொண்டுவந்தது.




பெண்கள் சுன்னத்திற்கு எதிரான சுவரொட்டி

எனினும் கலாச்சாரத்தின் ஆழமான பிடிப்பு காரணமாக 93.1% பெண்கள் இங்கு சுன்னத் செய்துள்ளனர். இது சட்டவிரோதமாயினும் யாரும் தண்டிக்கப்படுவதில்லை.

ஜிபூடியுடன் இந்தியாவிற்குப் பழங்காலத்திலிருந்தே வணிகத்தொடர்பு உள்ளது. இங்குள்ள அடூலிஸ் என்ற துறைமுகம் வழி வாசனைப்பொருள்கள், பட்டு, தந்தம் இவற்றை ஏற்றுமதி செய்து அளித்து அங்கிருந்து தோல் பொருள்களைப் பெற்றுச்சென்றுள்ளனர். இங்குள்ள பழமையான இந்திய மக்கள் குஜராத்திகளாவர். ஏறத்தாழ 600 இந்தியர்கள் இங்கு வாழ்கின்றனர். ஜிபூடியில் இந்தியத் தூதரகமும் , டில்லியில் ஜிபூடி தூதரகமும் உள்ளன.

.